# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2131/57 - 2019 ජූලි 18 වැනි සිකුරාදා - 2018.07.12

**2131/57 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிர. செய. குறி. இல. : கே. டீ. எஸ்./கே. ஜீ. கே/4/9/94/143. காணி மற்றும் பாராளுமன்ற மறு. அமை. குறி. இல. : 13/96/VE/130.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், கண்டி கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், கங்கவட்ட கோரளை சிறிய பிரிவில், ஹிந்தகல பிரிவு (267) கிராம அலுவலர் பிரிவின் ஹிந்தகல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்திற்கு பதிலாக கண்டி மாவட்ட சிரேஷ்ட அளவை அதிகாரியினால் அளவிட்டு தயாரித்த 2018.12.27 ஆந் திகதிய ஆரம்ப வரைபட இல. 6812 இன் துண்டு இல. 1 முதல் 5 வரையிலான பரப்பளவு 0.6150 ஹெக்டயார் வீஸ்தீரணமான காணித்துண்டின் விபரங்கள் கீழ்வருமாறு :

**துண்டு இல. 01**
காணியின் பெயர் : மோப்ரே தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : வீ. ஜோனத்தன் மோப்ரே பங்கலா அருகில் மக கந்த ஹிந்தகல ; விஸ்தீரணம் : 0.1170 ஹெக்டயார்.

**துண்டு இல. 02**
காணியின் பெயர் : மோப்ரே தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : மொஹமட் லதீப், இல. 09, அரநாயக்க மாலத்த மாவனென்ன ; விஸ்தீரணம் : 0.3270 ஹெக்டயார்.

**துண்டு இல. 03**
காணியின் பெயர் : மோப்ரே தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : வீ. ஜோனத்தன் மோப்ரே பங்கலா அருகில் மககந்த ஹிந்தகல ; விஸ்தீரணம் : 0.1200 ஹெக்டயார்.

**துண்டு இல. 04**
காணியின் பெயர் : மோப்ரே தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : வீ. ஜோனத்தன் மோப்ரே பங்கலா அருகில் மககந்த ஹிந்தகல ; விஸ்தீரணம் : 0.0130 ஹெக்டயார்.

05. **துண்டு இல. 05**
காணியின் பெயர் : மோப்ரே தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : வீ. ஜோனத்தன் மோப்ரே பங்கலா அருகில் மககந்த ஹிந்தகல ; விஸ்தீரணம் : 0.0380 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கண்டி கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதி களாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

பீ. எம். பி. ஜீ. பி. வீ பண்டார,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத் சத்தர மற்றும்
கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கண்டி கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை,
2019, யூலை 08.

7-943


G30514 - 32 (2019/07)



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*திருத்தம்*

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : அம்பகோ/3/5/அ/153.
கா. மற்றும் பாரா. மறு. அமை. கு. இல. : 4-3/2/2013/எப்ஆர்/557.

மேலே குறிப்பிடப்பட்ட தலைப்பின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.05.06 ஆந் திகதிய 2122/03 ஆம் இலக்கம் உடைய அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட காணி எடுத்தல் சட்டத்தின் பிரிவு 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதி நீக்கப்பட்ட திகதி மற்றும் மேலே குறிப்பிடப்பட்டதற்குப் பதிலாக வேறொரு திகதியை மாற்றுதல் ஆகியவை பின்வருமாறு திருத்தப்பட வேண்டும் என்பதனை தெரிவிக்கப்படுகின்றது.

| *நீக்கப்பட வேண்டிய திகதி* | *நீக்கப்பட வேண்டிய திகதிக்குப் பதிலாக மாற்றும் திகதி* |
| --- | --- |
| 2019, யூன் 12 | 2019, ஒகத்து 28 |

ஆர். டி. பி. சுமணசேகர,
பிரதேச செயலகம்,
அம்பகமுவ கோரளை.

பிரதேச செயலகம்,
அம்பகமுவ கோரளை,
2019, யூலை 08.

07 - 944